www.tamilarangam.net

# தேனீ

THENEE

வைகாசி/ஆனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேற்று இருந்தோம்!

கடற் குதிரைகளில்
நட்சத்திர மீன்களை அள்ளி
வீசிச் சென்ற
கடற் தேவதை
என்னைப் பெற்று அப்பாவிடம்
கொடுத்தாக
சொல்வாள் என் அம்மா.

அலைமேலால் முரல்பாய்ந்து
அதிலொன்று அணியத்திருந்த
பாட்டனின் வயிற்றைக்
கிழித்ததாக
கதை சொன்ன தாயே!
என்னைப் பெற்ற தேவதையே!

எங்களிடம் கடல் இருந்தது
கரை இருந்தது
நட்சத்திரங்கள் இருந்தது
நிறைந்து
காலங்கள் எமக்கிருந்தது.

இன்று
கடல், கரை, நட்சத்திரங்கள்
எவரிடமுமில்லை
காலங்களும்
நாங்களும் கள்வர்களிடம்.

— சுகன்

www.tamilarangam.net



# ரீங்காரம்

கடந்த 28.04.92 அன்று.

வேறு ஒரு 'இனத்தைச்' சேர்ந்திருந்தார்கள் என்பதைத் தவிரவேறெந்த வித்தியாசத்தையும் கொண்டிராத ஒரு மக்கள் குழுவினர் மீது ஆயுதங்களால் மாத்திரம் தமது இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த முயலும் ஒரு கும்பல் கொலை வெறித் தாக்குதல் நடத்தியது நள்ளிரவில்.

இடம், பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தைக்கு அருகிலுள்ள அழிஞ்சிபத்தன என்கின்ற சுமார் 400பேர் வசிக்கும் சிறுகிராமம்.

கிழக்குக் கரையோரமாக அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் பெரும்பாலானவர்கள் மூஸ்லிம்கள் ஆவர்.

நள்ளிரவில் நிகழ்த்தப்பட்ட இந்தப் பெருந்தாக்குதலில் 54பேர் கொல்லப்பட்டுள்ளனர், படுகாயமுற்றோர் தொகை17. உயிர்தப்பியோர் காடுகளிற்குள் ஒளிந்து கொண்டனர்.

இந்தப் படுகொலைகளை நிகழ்த்தியது புலிகள் தான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டோரின் தலைகள் துண்டிக்கப்பட்டதாகவும் இறந்த உடல்களும் வீடுகளும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

www.tamilarangam.net

நியாயப்படுத்தல்கள். அரசியல் விளக்கங்கள் இவற்றிற்கெல்லாம் அப்பாலும் இவைகள் மனிதப்படுகொலைகள்தான்.

காத்தான் குடியைப்போல், கொக்கட்டிச் சோலையைப்போல,அனுராதபுரத்தைப்போல இரக்கமற்ற நீதியற்ற துரோகப்படுகொலைகள்.

நிராயுதபாணி அப்பாவி மக்கள் மேல் ஆயுதம் வைத்திருக்கும் இனவெறியர்கள் நடாத்தும் முதுகெலும்பற்ற கொலைகள் இவை.

நள்ளிரவு 1 மணியளவில் இந்தக்கிராமத்திற்குள் பிரவேசித்த இந்த இனவெறிக்கும்பல் 4 மணிவரை படுகொலைகளை நடத்தியுள்ளனர். துப்பாக்கிகள், கத்திகள் என்பன அப்பாவிமக்கள் மீதான இந்தப்படுகொலையின் போது பாவிக்கப்பட்டுள்ளன. சிறுகுழந்தைகள் தரையில் அறைந்து கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப்படுகொலைகள் நடைபெறுவதற்கு முன் இந்தக் கிராமத்திலுள்ள பொலிஸ்நிலையம் புலிகளினால் தாக்கப்பட்டிருப்பதும் புலிகளின் முஸ்லிம் மக்கள் பற்றிய நிலைப்பாடு மற்றும் அணுகுமுறைகளும் கடந்தகால சம்பவங்களும்(காத்தான்குடி கதைகள் மறக்கமுடியாதவை) இதுவும் புலிகளின் நரவேட்டைகளில் ஒன்றென ஊர்ஜிதப்படுத்துகின்றன.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் பெண்களும் பச்சிளங்குழந்தைகளும் ஆவர்.

"எனது குடும்பத்தில் மொத்தம் 12 பேர். இவர்களில் 8 பேர் பெண்கள். இந்தப் 12 பேரில் நான் மட்டுமே உயிர்தப்பியுள்ளேன். புலிகளின் தாக்குதல் நடைபெற்ற பொழுது நான் வீட்டு முகட்டிற்குள் ஏறி ஒளிந்து கொண்டேன். புலிகள் எங்கள் வீட்டுக்கு வந்து எங்கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிபர் என்று கேட்டபடி வீட்டிலிருந்தோரை சுட்டனர். பின்னர் வெட்டினர்." என்கிறார் அதிஸ்டவசமாக உயிர்தப்பிய ஒரு பாடசாலை அதிபர்.

சுமார் 500 கொலைஞர்கள் இப்படுகொலை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

இதுவும் புலிகளின் 'தடுப்பு யுத்தத்தின்' ஒரு பகுதியா? அல்லது அவர்கள் விடும் 'ஆபத்தான தவறுகளில்' இதுவும் ஒன்றா என்ற கேள்விகளும் ஆராய்ச்சிகளும் எதற்கு உதவப்போகின்றன? மனிதநேசத்திற்கும் மனச்சாட்சிக்கும் விரோதமான துரோகச் செயல்களை 'தேசியத்'தின் பேரால் 'நியாயப்படுத்துவதற்கு' என்பதைத் தவிர?

அங்கு கொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களுக்கும் நிச்சயமாய் இவை தெரிந்திருக்காது.

இந்தப்படுகொலைகள் நிகழ்ந்து முடிந்தபின் கரபொல, முத்துகல ஆகிய தமிழ்மக்கள் வாழும் கிராமங்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொலைவெறித்தாக்குதல் நடாத்தியபோது அங்கும் கொல்லப்பட்டது வேறுயாருமில்லை அப்பாவிமக்கள் தான். அவர்கள் வேறெதற்கு இருக்கிறார்கள், கொல்லப்படுவதற்குத் தானே. இவை பழிவாங்கல் நடவடிக்கைகள் எனச் சொல்லப்படுகின்றது.

54 அப்பாவிமக்கள் இந்த அநீதியாளர்களின் இனவெறிக்குப் பலியாகியுள்ளனர். 57பேர் காயமடைந்துள்ளனர்.

இவைதவிர

பல பெண்கள் இந்த மிருகங்களினால் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். இளம்பெண்கள் பலரைக் காணவில்லை.

இங்கும் துப்பாக்கிகள், வாள், கத்திகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரும்புக்கம்பி போன்றவற்றுடன் நிராயுதபாணி மக்களுடன் இந்தக் கோழைகள் போர் புரிந்துள்ளனர்.

139 குடும்பங்கள் வாழ்ந்த முத்துகலவில் காலை ஐந்தரை மணியிலிருந்து ஏழரை மணிவரை ஊர்காவல்படையினர் கொள்ளையில் ஈடுப்பட்டபின் ஒன்பதரை மணிவரை கரபொல கிராமத்தில் தமது அழிவுகளை தொடர்ந்தனர்.

முத்துகலை கிராமத்திலுள்ள 48 வீடுகளும் அம்மன், பிள்ளையார் கோவில்களும் எரிக்கப்பட்டுள்ளன. 6பேர் காணமல் போய்விட்டனர்.

பத்துப்பேர் கொண்ட குடும்பத்தில் பத்து வயது சிறுவன் தவிர அனைவரும் வீட்டிற்குள் வைத்துக் கொழுத்தப்பட்டுள்ளனர்.

வீடுவீடாகப் புகுந்து வெட்டிக் கொலை செய்ததுடன் சிலர் பொலிசாராலும் ஊர்காவல் படையினராலும் பிடித்து வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

இச்சம்பவங்களிற்குப்பிறகு இந்தக்கிராமங்களில் இராணுவம் நிலை கொண்டிருக்கிறது (பாதுகாப்பு வழங்கவாம்)

இனியும் நடக்கப்போகும் படுகொலைகளில் இவர்களின் பங்கு நிச்சயம்.

அடுத்த படுகொலைகள் யாராலோ எதன் பேராலோ நடைபெறும்வரை எந்த உத்திரவாதமுமின்றி இந்தக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயத்துடனும் பீதியுடனும் உயிர்வாழ்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாங்கள் எங்கே இருக்கின்றோம்?

மல்லிகா

1910ஆம் ஆண்டிலிருந்து நாம் மார்ச் மாதம் 8ம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடுகின்றோம். உலகிலுள்ள அனைத்துப் பெண்களுக்கும் இது ஒரு முக்கிய தினமாகும். தங்கள் உரிமைகளைப் பற்றி கதைக்கவும், கலந்துரையாடவும் பெண்களுக்கென ஒரு நாளேனும் கிடைத்திருப்பதை ஒரு வெற்றியெனவும் கொள்ளலாம். ஆனால், உண்மையில் எத்தனை பெண்கள் தங்கள் உரிமைகளையும், சுதந்திரத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கிறார்கள்? நாம் எங்கு இருக்கின்றோம்? எங்களில் அதிகமானவர்கள் இன்னும் சமையலறைக்குள்ளும், ஆண்களுக்கு பின்னாலுமே நிற்கின்றோம்.

கடந்த 82 ஆண்டுகளைத் திரும்பிப் பார்போமானால், உலகின் சில பாகங்களில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில், உள்நாட்டுயுத்தம், இனப்பிரச்சினை, ஊழல், சூழல் மாசுபடல், அகதிப்பிரச்சனை, ஜனநாயகஉரிமை மறுப்பு போன்றவற்றால் பெண்கள் கொடூரமான அனுபவங்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இக்கட்டுரை முக்கியமாக இலங்கைப் பெண்களின் நிலையையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஆனால், உலகிலுள்ள அனைத்துப் பெண்களினது ஒடுக்குமுறையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றாகவேயுள்ளது.

ஒரு பெண் பிறந்த நாளிலிருந்து ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறாள். அவளுக்கு அடிப்படையான மனிதஉரிமைகள், அங்கிகாரம், கல்வி போன்றவை மறுக்கப்படுகின்றதுடன், அவள் தன் வாழ் நாள் முழுதும் ஆண்களில் தங்கியே வாழவேண்டியுள்ளது. அவள் வீட்டிலும், வேலைஸ்தலத்திலும்(வேலைக்கு போகும் பெண்ணாகவிருந்தால்) சுரண்டப்படுகிறாள். அவள் குறைந்த கூலிக்காகவே பாவிக்கப்படுகின்றாள். அவள் தொழிற்சாலையிலோ அல்லது வேறு எந்த இடத்திலேயோ வேலை செயயாவிட்டாலும், ஒரு ஆணிலும் பார்க்க கடுமையாகவும், கூடிய நேரமும் ஒரு பெண் வேலை செய்கின்றாள். அவள் வீட்டில் செய்யும் வேலை, வேலையாக கருதப்படாததுடன் அதற்கான ஊதியமும் வழங்கப்படுவதில்லை. சிலசமயங்களில் அவள் வெளியிலும், வீட்டிலும் உழைக்கவேண்டியவளாகிறாள்.

ஒரு நாட்டின் வருமானத்தை பெற்றுத் தருபவர்கள் பெண்களே. "பெண்களே உலகின் முதுகெலும்பு" எனக் கூறுவது தவறாகாது. ஆண்களுக்காக வீட்டு வேலைகளைச் செய்யவும், பிள்ளைகளை பராமரிக்கவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பெண்கள் உதவிபுரிகிறார்கள்.

இலங்கைக்கு பெரும்பகுதியான அன்னியச் செலவாணியை பெற்றுத் தருபவை தேயிலையும், தையற்துறையும் ஆகும். தேயிலைத் தோட்டங்களிலும், சுதந்திர வர்த்தகவலயத்திலும் தொழில்புரியும் தொழிலாளர்களின் பெரும்பான்மையினர் குறைந்த கூலிக்காக வேலைக்கமர்த்தப்பட்ட பெண்களே. இப்பெண்கள் சிரமமான சூழ்நிலமைகளுக்கு மத்தியிலேயே வேலை செய்கிறார்கள். ஆண்களிலும் பார்க்க குறைந்த தொகையையே ஊதியமாகப் பெறுகிறார்கள். சுதந்திர வர்த்தக வலயத்தலுள்ள பெண்கள் சனநெரிசலான விடுதிகள் வாழ்வதுடன், சுகாதாரவசதி, மலசலகூடவசதிகள், பாதுகாப்பு, காப்புறுதி, ஓய்வூதியம் போன்றவை அற்ற நிலையே நிலவுகின்றது. அதிகமான பெண் ஊழியர்கள் இரவு வேலையின் போது பாலியற்பலாத்காரம், திருட்டு போன்றவற்றிற்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. அதிகமாக சுரண்டப்படுபவர்கள் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களே. அவர்கள் மிக வறுமையாகவேயிருக்கிறார்கள். ஆனால், அவர்களே எமது நாட்டின் அன்னியச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலவாணியின் பெரும்பகுதியை ஈட்டிக் கொடுப்பவர்கள். நாளுக்குநாள் இப்பெண்கள் வறுமை, பட்டினி, நோய் போன்றவற்றால் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இதனால் பெண்களினதும், குழந்தைகளினதும் இறப்புவிகிதம் இங்கு கூடுதலாகவுள்ளது. '

தற்போது நமது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் அனேகமான பெண்களின் வாழ்க்கை துயர்நிறைந்ததாகவேயுள்ளது. அவர்களின் கணவன்மார், மகன்மார் அல்லது சகோதரர்மார் இலங்கை இராணுவத்தால் கொலை செய்யப்பட்டோ அல்லது காணமல் போயோயுள்ளார்கள். இதனால் பல பெண்கள் பிள்ளைகளுடனோ அல்லது வயோதிப பெற்றோருடனோ உதவியற்ற நிலையில் தனியே விடப்படுகிறார்கள்.எந்தவித வருமானமுமற்றநிலையில் பிள்ளை வளர்த்தல், பெற்றோரை பராமரித்தல் போன்ற சுமைகளைத் தங்கள் தோள்களிம் தாங்கவேண்டியிருப்பதால், அவர்களின் வறுமையும், துன்பங்களும் அதிகரிக்கின்றன. சிலசமயங்களில் அவர்கள் பிச்சை எடுப்பதற்கோ, அல்லது தற்கொலை செய்வதற்கோ தள்ளப்படுகிறார்கள்.

இக்கட்டுரையில் நான் முன்பு குறிப்பிட்டபடி, பெண் ஒடுக்குமுறைக்கு முக்கியமான காரணம் அவர்கள் பிறந்த நாளிலிருந்து எதிர்கொள்ளும் கீழ்படிவேயாகும். அவளுக்கு கல்வி மறுக்கப்படும் காரணத்தினால், அவளால் தனது வாழ்நாளில் எதிர்நோக்கும் கஷ்டங்களிற்கெதிரக போராடுவது கடினமாகவுள்ளது. பெண்களை மற்றும் ஒடுக்கும் காரணிகளாக சமயம், கலாசாரம், சீதனம், சாதிமுறை போன்ற சமுகஅமைப்பு ரீதியான ஒடுக்குமுறைகள் போன்றவையை நான் இக்கட்டுரையில் குறிப்பிடவில்லை.

ஒரு பெண் பொருளாதார ரீதியாக சுதந்திரமடைந்திருந்தால் அவள் தனக்கு வேண்டியவற்றை பெறுவதற்கும், சமூகத்தில் தனக்கான பாதுகாப்பை உறுதிபடுத்தவும் முடியும். அவள் ஒரு மனித ஜீவியாக அங்கிகரிக்கப்படவேண்டுமென்பதுடன், ஆண்களுக்கு சமனாக நடாத்தப்படவும் வேண்டும்.

நாம் முன்னோக்கி அணிவகுத்துச் செல்கையில், நாம் பெண்களாக அங்கரிக்கப்படுவதுடன், சமூகத்தில் சிறந்ததும்,சமனானதுமான அந்தஸ்து கிடைக்குமெனவும் 82வது சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில் நான் நம்புகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வினைகள்

ஜீவுன்



கையிலிருந்த கடிதத்தை
சித்து முடித்து பொழுது
லாவற்றிலும் வெறுப்பும்
க்தியும் தான் மிஞ்சி
ன்றது. எம்மையும், எமது
கத்தின் எதிர் பார்ப்புகள்,
பிக்கைகள் எல்லாவற்றையும்
ாற்றி, பாடம் சொல்லிக்குக்
காண்டு காலம்
ருண்டோடிக்
ாண்டிருக்கிறது....சரித்திர
ழ்வுகள் திரும்பத்திரும்ப
ழுமாமே? அது வேவ்வேறு
கத்தட்டுக்களில் நிகழும்
ற சித்தாந்த விளக்கங்கள்
று! ஆனால் தனிமனித
வாழ்விலும் அது நிகழ வேண்டுமா? அது கூடாது என்று என் அடிமனதில் ...இல்லை ...ஆம்.... எம்மவர்களுக்கு ஏதும் ஏற்படும் போது ஏன் மனத்தை அதிகமாக அலட்டிக் கொள்கிறோம்...நாங்கள் பொதுவாகவே சுயநலவாதிகள் என்பதால்தானோ?

என்னுடைய நண்பன் இத்தனை கால இடை வெளிக்குப் பின் என் விலாசத்தை அறிந்து கடிதம்

www.tamilarangam.net

எழுதியிருந்தான்.....

"...இத்தனை பிள்ளைகள். என்ன செய்வது? பிள்ளைகளின் படிப்பிலும் நான் கவனம் செலுத்தவில்லை. ஒரு மகள் சவுதிக்குப் போனாள், பணிப்பெண்ணாக. இன்று சீரழிந்து மனோவியாதியோடு வந்து நிக்கிறாள்..எங்கடை சனத்தைத் தெரியும்தானே. அவளை உயிரோட கொல்லத்திரியுதுகள். அவளைச் சுகப்படுத்த வேண்டும். மற்றப்பிள்ளைகளுக்கும் ஒரு வழி செய்ய வேண்டும்..". கடிதம் தொடர்ந்தது. ஆம். நண்பனுக்கு ஏதாவது செய்யத்தான் வேண்டும்.

* * *

நாடாறுமாதம், காடாறு மாதம் என்பது போல கணக்குப் பரிசோதகர்களின் வாழ்க்கை! கைப்பையும் பிரயாணமும்... சாதாரணமாகிவிட்ட வாழ்க்கை.

மலைநாட்டின் குளிர்ந்த இரவின் இருட்டில்.... தாபால் கோச்சு மூச்சுவிட்டு ஆடியசைந்து கொண்டு சென்றது. பிரயாணிகள் இருக்கைகளில் இருந்தபடியே தூங்கிவழிந்து கொண்டிருந்தார்கள். அதிகமகாவே மலையகத்திற்கு பஸ்சில் பிரயாணம் செய்யும் எனக்கு இது வேண்டாத அனுபவமாகவே இருந்தது.

பாம்பு போல நெளிந்து மேலே ஏறும் ரோட்டில் இருமருங்கிலும் பச்சைப்பசேலென்ற மலைச்சாரல்களினூடாக பஸ்சில் போவது ஒரு தனி அனுபவம்தான்....ஆனால் ..இரவுக் கோச்சுப் பிரயாணம்! வெளியில் கும் இருட்டில்..எதுவுமே தெரியவில்லை..தூங்கிவழியாமல் வேறு என்ன செய்வது?

யாழ்ப்பாணத்து மத்தியதர மனிதர்கள் மலையகத்தில் பிரவேசிப்பது அந்த வளமான பூமியில் தமது வியர்வையையும் இரத்தத்தையும் கொடுத்து பொன் விளையச் செய்வதற்கல்ல.... வெள்ளைக்காரன் காட்டித்தந்த வழியில் அங்குள்ள மக்களை இன்னும் கொஞ்சம் கசக்கிப்பிழியத்தான். "கீழுள்ள மக்களின் தலைகளில் குட்டுவதும் மேலுள்ளவர்களின் சப்பாத்துகளை நக்குவதுமான குணாம்சம்..." என்று யாரோ சொன்னதாக ஞாபகம்.

தோட்டத்து சின்னதுரை, வாத்தியார், கடைக்காரர் இன்னும் பெரிய கருங்காலித்துரைகள்.... "ஸ்ரீ நிவால், பலேகல்ல" தோட்டமுதலாளிகள் எம் தமிழ் சரித்திர நாயகர்களாகிவிட்டார்களே!

நாங்கள் வேறுரகம். கொட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மழையிலும் அட்டைக்கடியிலும் நின்று கொண்டு கொய்த தேயிலையும் எடுத்த ரப்பரும் அக்கரைச் சீமைக்கு போகிற வரைக்கும் உறிஞ்சிய உழைப்பை வெறும் எண்களும் சைவர்களுமாக துரைமார் எழுதிவைக்கும் கணக்குகளைச் சரிபார்ப்பவர்கள். பச்சை மலையில் அங்காங்கு நின்று உழைக்கும் மனிதர்கள் - தோட்ட லயன்களில் கேட்கும் அவலங்கள் - எல்லாம் நாங்கள் பார்க்கும் "செக்ரோல்களில்" வெறும் முழுப்பேரும் அரைப்பேருந்தான்! கணக்குப்புத்தகங்களில் பச்சை, சிகப்பு, ஊதா நிற மைப்பேனாக்களினால் வட்டங்கள், சரிகள், புள்ளடிகள் போட்டு கவனமாகப் பரிசோதிப்போம். எவ்வளவு உழைப்பு சுரண்டப்பட்டது என்று அல்ல! அவர்களின் உழைப்புக்கு எத்தனை சதம் கூடக் கொடுத்து விட்டார்களோ, முதலாளிக்கு நட்டமேற்பட்டு விட்டதோ என்ற கரிசனையோடு!! இறுதியில் ஐந்தொகை போட்டு ஐயாமாரின் கணக்கு ( நாங்கள் அறிந்த வரை) அப்பழுக்கற்றது என்று சார்ட்டிபிக்கட் கொடுக்கும வரை நாங்களும் ஓயமாட்டோம். அவர்களும் எங்களைக் கவனிப்பதில் கவனமாக இருப்பார்கள். சுப்பிரின்டன்ற் (பெரியதுரை) பங்களாவின் சுகங்கள் எங்களுக்கும் கிடைக்கும்..... முனியாண்டியும் மீனாட்சியும் எங்கள் கணக்குப்பரிசோதனைக்கு உதமுடியாதவர்கள்..என்ன செயவது? பல யாழ்ப்பாணத்து இளைஞர்கள் உழைக்கும் மலையகத்தை, தங்கள் "ரை"களை சரிசெய்து கொண்டு, இந்த இரவல் பங்களாக்களில் இருந்து பார்த்துத்தான் பழக்கப்பட்டவர்கள்!

நான்....

சாதாரணமாக வேலை செய்யுமிடத்திற்கு நேரடியாகப் பஸ்சில் போயிருக்க வேண்டிய நான், நண்பன் ஒருவனின் வேண்டுகோளுக்காக ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். நான் கணக்குப் பரிசோதனை செய்ய வேண்டிய தோட்டத்திற்கு அருகிலுள்ள சிறிய நகரத்தில் அரசாங்கத் திணைக்களமொன்றில், அவன் வேலைபார்த்துக் கொண்டிருந்தான். இந்த முறை தன்னுடன் தங்க வேண்டுமென்று வற்புறுத்திக் கடிதம் எழுதியிருந்தான். மறுக்க முடியவில்லை.

நீராவியுடன் சேர்ந்த ரயிலின் பெருமூச்சு...

ஒரு சிறிய ஸ்டேசனில் ரயில் நின்றது. அதிகாலை நாலு

www.tamilarangam.net

மணியிருக்கும். கைப்பையுடன் இறங்கினேன். ஒருவன் எரியும் பந்தமொன்றைப் பிடித்துக் கொண்டு நின்றான். அந்த வெளிச்சத்தில் ஸ்டேசன் மாஸ்டர் ட்ரைவருக்கு "லைட்" காட்டினார். கோச்சு வண்டி முனகிக் கொண்டு சென்றது. நண்பன் அதிகாலை வந்து என்னை அழைத்துச் செல்வதாகச் சொல்லியிருந்தான். அங்கிருந்த வாங்கு ஒன்றில் கைப்பையுடன் அமர்ந்து கொண்டேன். ஸ்டேசன் மாஸ்டர் தனது தூக்கத்தைத் தொடர எங்கோ மறைந்து விட்டார். பந்தம் அணைந்து விட்டது. அதைப்பிடித்திருந்தவனையும் காணவில்லை. எங்கும் ஒரே இருட்டு. விடியும் வரைக்கும் இந்த இருட்டில் இருக்க வேண்டியதுதான். உட்கார்ந்து வந்ததில் உடம்பில் வலி எடுத்தது. அடுத்த முறை இந்த ரயிலில் வருவதில்லை என்றும் தீர்மானம் எடுத்துக் கொண்டேன். கண்ணை அரைத்தூக்கம் தழுவ முனைந்து கொண்டிருந்த போது அண்மையில் ஒரு சிறு பிள்ளை அழுவது கேட்டது.

"தூங்கு, தூங்கு...இருட்டிலே என்னா செயறது..." ஒரு பெண்ணின் குரல் மிக அண்மையில்.... நான் மட்டும் அந்த இருட்டில் தனியாக இல்லை... நான் இருப்பதைக் காட்டிக்கொள்ள சிறிது அடித் தொண்டையால் செருமினேன். அந்தப் பெண்ணும் இன்னுமொரு மனிதன் அங்கு இருப்பதை உணர்ந்து கொண்டாள் போலும்...

"யாரு ஐயா.....?"

"ஓம்....இந்த ரயிலில்தான் இறங்கியதோ...?"

"ஆமா...வேறு ஆழு இறங்கியதை நான் காணலையே...."

நானும்தான் அவள் இறங்கியதைக் காணவில்லை. குழந்தை தூங்கியது. சிறிது நேரம் அமைதி.

"இந்த இரவிலை ஏன் தனியாக...? நான் கேள்வியை முடிக்கவில்லை.

"எங்க ஊரிலையிருந்து வர இந்த ரயிலு மட்டும்தான் இருக்கு. இப்பப வந்தா விடிய வசு பிடிக்கலாம்...."

"பஸ் இங்கே வருமா?"

"இல்லை...கொஞ்ச தூரம் நடந்து போக வேணும்..."

பரவாய் இல்ல, எனக்கு. விடிந்ததும் நண்பன் மோட்டார் சயிக்கிளில் வருவதாகச் சொல்லியிருந்தான்.

"இங்கே வேலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்கிறாயா..?"

அவளின் பேச்சிலிருந்து அவளுடன் அந்தத் தோணியில் பேசலாம் என்று எனது யாழ்ப்பாண மூளைக்குத் தோன்றியது....

"போன வருசம் இங்க வேலசெய்தன்..... அதுதான் இந்த ஊர் தெரியும்....இப்ப ஆத்தாவோட எங்க ஊரிலை இருக்கிறன்...."

"அங்க தோட்டத்திலே வேலை செய்யிறது இல்லையா...?

"இல்லை. வேலை செய்த தோட்டத்தை வேறே முதலாளிகள் வாங்கினாகள். பெரிய கொழப்பம் வந்துது, ஸ்ட்ரைக் எல்லாம் வந்துது. எங்களை வெளியிலை கலைச்சுட்டாங்க....ரப்பர் தோட்டத்திலை வேலை, இல்லாட்டி பக்கத்து கிரமத்திலே ஏதாவது வேலை கிடைச்சா..உண்டு.... கவலையிலே எங்க அப்பரும் போயிட்டாரு..."

"இங்கே ஏன் வந்தது...?

"பிள்ளைக்கு காய்ச்சல். மருந்துக்கு காசி இல்லை...ஒருத்தரிட்டை வாங்கத்தான்....."

நான் பேசாமல் இருந்தேன். ஏன் கேட்டேன் என்றிருந்தது.

அவள் எழுந்து நடமாடுவது போல இருந்தது. ஒரு பைப்பிலிருந்து தண்ணீர் ஓடும் சத்தம் கேட்டது.

"அட, இங்கே பைப் தண்ணி இருக்கா..?

"ஆம்..ஐயா..மூஞ்சியை இதிலை கழுவலாம்...."

"என்ன புறப்பட்டாச்சா.."

"ஆம் ஐயா, இப்ப போனால்தான் முதல் வசுவைப் பிடிக்கலாம்...."

"பஸ்க்கு காசு இருக்கா..."

"கொஞ்சம் இருக்கு....."

"என் பக்கட்டுக்குள் இருந்த சில்லறைகளை பொறுக்கி எடுத்து "பஸ்சுக்கு இதை வைச்சிரு" என்று நீட்டினேன். ஒரு ஈரமான கை சில்லறைகளை வாங்கிக் கொண்டது.

"சரி ஐயா, நான் போய்யிட்டு வாரேன்"

முகம் காணாத சந்திப்பு முடிவடைந்தது.

இருள் சிறிது சிறிதாக விலகிக் கொண்டிருந்தது. தூரத்திலிருந்த பைப்பிலிருந்து தண்ணி சிறிது சிறிதாகச் சொட்டிக் கொண்டிருந்தது... அருகில் இருந்த வாங்கு காலியாக இருந்தது.... அவள் இப்பொழுது பஸ்நிலையத்துக்குப் போய்ச்சேர்ந்திருப்பாள்.

பொழுது முற்றாகப் புலர்ந்த பொழுது நண்பனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோட்டார்சைக்கிளின் சத்தம் ஸ்டேசன் அருகில் கேட்டது. கைப்பையுடன் நண்பனை நெருங்கினேன். நேற்று இரவு யாரோ தோட்டத்துரையின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் சரியான முசுப்பாத்தியாம். அதாலை விடிய வரேலாமல் போனதுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். குசலம் விசாரித்துக் கொண்டோம். யாழ்ப்பாணப் புதினங்கள் பரிமாறினோம்.

மோட்டார் சையிக்கிள் புறப்பட்டது. நண்பன் பேசிக் கொண்டே போனான்.

"சனிக்கிழமை எண்ணை வைச்சு முழுகு என்று வந்த கடிதங்கள் இப்போ நல்ல சீதனத்தோட பெண் பாக்கிறம், யாழ்ப்பாணம் வந்து பார் என்று வருகுது" என்று பெருமைப்பட்டுக் கொண்டான்.

"எப்ப கலியாணம் ?"

"எல்லாம் கெதியிலை நடக்கும். ஆனால் எனக்கேற்ற பெண்ணை இவை பார்ப்பினமோ தெரியாது. சும்மா பட்டிக்காடு ஒன்றை கட்டிக் கொண்டு வாழேலாது பார். நான் புளங்கிற ஆட்கள் அப்படி. தோட்ட பெரியதுரையள், டி.ஆர்.ஒக்கள், பெரிய கொண்ராக்டர்மார் தான் என்றை பிரண்டஸ். எல்லாரும் வெள்ளைக்காரர் மாதிரி. ஒரு இரவிலை கிளப்பிலை நூறுநூறாய் நோட்டுக்ளை எறிவாங்கள்...அந்த லெவலிலை நாங்கள்..."

அவன் அடுக்கிக் கொண்டே போனான்.

மாதச்சம்பளத்திலும் பிரயாண பட்டாவிலும் சீவிக்கத் திண்டாடும் நான்! மோட்டார் சைக்கிள் பின் சீட்றிலிருந்து விழாமலிருக்க இறுக்கிப் பிடித்துக் கொண்டேன்.

சிறிய மலை மேட்டில் தெருவைப் பார்த்தபடி அழகான வீடு, ரேடியோ, தளபாடங்கள்...!

"இந்த ரேடியோ ஒரு தோட்ட சுப்பிரீன்ரன்டின் பிரசன்ட்....என்னரை ஒரு கையெழுத்துக்கு அவன் கொடுக்கிற மரியாதை...."

நேர்மையாக அரசாங்கச் சம்பளத்தில் மட்டும் இப்படி அவன் வாழவில்லை என்பது எனக்கு விளங்கியது.

"குளிச்சிட்டு வா. இங்கிருந்து நீ வேலை செய்யிற தோட்டடத்திற்கு பஸ்சிலும் போகலாம்.... நான் மோட்டசைக்கிளிலும் கொண்டு போய் விடுறன்...." அவன் உபசாரம் செய்தான். குளித்து விட்டுச் சாப்பிட்டோம். வயது போன வேலைக்காரன் பரிமாறினான்.

www.tamilarangam.net

"எத்தனை மணிக்கு பஸ் இருக்கு?"

"இன்னும் முக்கால் மணித்தியாலத்திலை ஒரு பஸ் இருக்குதுங்க" என்றான் வேலைக்காரன்.

"சீ..சீ..நான் உன்னை மோட்டசயிக்கிளில் கொண்டு போய் விடுறன்.." இது எனது நண்பன்.

தேனீர் பருகிக் கொண்டிருந்தோம். பின் பக்கத்திலிருந்து வந்த வேலைக்காரனின் முகம் மாறியிருந்தது. என் நண்பனின் காதில் ஏதோ குசு குசு என்று சொன்னான். நண்பனும் வேலைக்காரனும் வீட்டின் பின்பக்கம் சென்று மறைந்து விட்டார்கள்.

எனக்கு வேலைக்குப் போக நேரமாகிக் கொண்டிருந்தது. மெதுவாக வீட்டின் பின்பக்கக் கதவருகில் போய்நின்று பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. பேச்சுக் குரல்கள் மட்டும் கேட்டன.

ஒரு பெண்ணின் அழுகையுடன் கூடிய குரலும், என் நண்பனின் அதட்டல் குரலும் மாறிமாறிக் கேட்டன.

உற்றுக் கேட்டேன்.....

"நான்தான் உனக்கு போன மாதமும் மணியோடர் அனுப்பினான். இங்கை ஏன் வந்தனி...."

"அந்தக்காசு சாப்பிடத்தான் போதும்... பிள்ளைக்கு பால் எல்லாம் வாங்க எப்படிக் காணும்...வேறே கொழந்தைக்கு காச்சல் வந்து, வெதமாத்தையாட்டைக் காட்டி..."

"உது செத்தாலும் எனக்கென்ன....!"

"ஒன்ரை பிள்ளையை இப்படிச் சொல்லிறியே...மனிசனாப்பா..."

அவள் விக்கி விக்கி அழுதாள்..

அந்தப் பெண் குரல்....

ஆம். ஸ்டேசனில் இருட்டில் என்னோடு பேசிய அதே பெண்குரல். ....அழுது முறையிட்டுக் கொண்டிருந்தது.

வேலைக்கு நேரமாகியது.....

எனது கைப்பையுடன் ரோட்டிற்கு இறங்கினேன். தோட்டத்திற்குப் போகும் பஸ் வந்து கொண்டிருந்தது.....

*　　*　　*

கால ஓட்டத்தில் நண்பனின் தொடர்புகள் அறுந்து விட்டன. ஒரு நாள் கோட்டைப் புகையிரத ஸ்தானத்தில், ஏழெட்டுப் பிள்ளைகளுடன் ஒரு பெண்ணை தனது மனைவி என்று அறிமுகப் படுத்தினான். அவள் பட்டிக்காடா இல்லையா என்று அறிய நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயலவில்லை.

இன்று திடீரெற்று இந்தக் கடிதம் அவனிடமிருந்து வந்திருந்தது.

கண்களை மூடிக் கொண்டேன்.

எங்கோ..... ஒரு ஷேய்க்கின் மாளிகையின் பின்புறத்தில் ஒரு பெண் நியாயம் கேட்டு அழும் காட்சி வந்தது...சீ..என்ன இது. எனது நண்பனல்லவா. டெலிபோனை எடுத்து ஒரு நம்பரை சுழற்றினேன்...உதவி கேட்க.

நாங்கள் சுயநலவாதிகள்.

## விலை

வாலிபனே
உன்
பார்வைக்கு
எவ்வளவு விலை
என்று
கூறிவிடு
அப்போதுதான்
பெற்றோர்
இப்போதே
வயிற்றை
கட்டத் தொடங்குவார்கள்.

***இணுவையூர் பி.ஆர்.ரஞ்சனி


## தேனீ
காலாண்டிதழ்

ஆக்கங்கள், சந்தா மற்றும் அனைத்துத் தொடர்புகட்கும்:

THENEE,
C/O:SALZ,
WAIBLINGER STR:59,
7000 STUTTGART 1,
GERMANY.
THENEE,
SPARKONTO Nr: 2300174892,
BLZ 600 501 01,
LANDESGIROKASSE,
7000 STUTTGART 1,
GERMANY.

| | |
|---|---|
| ஆசிரியர்குழு | தேனீக்கள் |
| தனிப்பிரதி | 4 டீ.எம் |
| வருடசந்தா | 20 டீ.எம் |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உன் வீட்டு
யன்னல் திரையை
அகற்றிவிட்டு
பார்வையை வெளியே
பரவவிடு.

வெய்யிலோடு
வெறுப்புக் கொண்டு
காலங்கள்
குளிர்மைக்குள்
தஞ்சமாம்.
பாவம்!
ஆடைகளை இழந்தது
மரங்களல்லவா?

வெய்யிலும் குளிரும்
வசந்தமும் இலையுதிர்ப்பும்
ஒன்றை ஒன்று
தள்ளிவிட்டு
ஓடி வந்துவிடுகின்றன.
இப்படித்தானே

கொல்லுவதற்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலவழிகளுண்டு

மனித வாழ்வும்.

மனதுள் துள்ளும்
உணர்வுகளை
அள்ளிக் கொட்ட
ஆசைதான்.
ஆனால்
எழுதுதல் இங்கே
தடைசெய்யப்பட்டுள்ளது.

சுதந்திரம்
கம்பிகளுக்குப் பின்னால்.
இன்னமும்
வாழ்ந்துகொண்டுதானிருக்கிறது.

நான்
போராடிக் கொண்டிருக்கிறேன்.

- நிருபா.



www.tamilarangam.net

# 218வது சட்டத்தை அகற்று!




மார்ச் 8 .சர்வதேச பெண்கள் தினம்.

உலகெங்கிலும் பெண்கள் தங்களுக்குரிய உரிமை கேட்டு ஊர்வலமாக செல்லும் நாள்.

வழமைபோலவே ஸ்ருட்காட்டிலும் பல பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த பெண்களால் ஊர்வலமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

எங்கும் நாவல்நிற பலூன்கள். நாவல்நிற கொடிகள்.

நாவல்நிற பூக்கள். உயிர்த்துடிப்புள்ள கோஷங்கள்.

அவர்களின் கோஷங்கள் மாத்திரம், வழமையானவற்றிலிருந்து சற்று மாறுபட்டிருந்தது.

பிரதான கோஷமாக ஜேர்மன் அரசாங்கத்தின் யாப்பிலுள்ள கருக்கலைப்பிற்கு தடை விதிக்கும் 218வது சட்டத்தை நீக்குவதே அமைந்தது.

"குழந்தைகள் வேண்டுமா, வேண்டாமா என்பதை பெண்கள் தனித்தே முடிவு செய்யவேண்டும்."

"218வது சட்டம் ஒரு அழுக்கு. அச்சட்டம் உடனே அகற்றப்படவேண்டும்."

"கிழக்கில் போன்றே மேற்கிலும் சுதந்திரமான முடிவெடுத்தலே சிறந்தது."

"பாலியல்வன்முறை, இனவாதம், முதலாளித்துவம் போன்றவற்றிற்கெதிராக சர்வதேச பெண்கள் போராடுகிறார்கள்."

போன்றவை அடங்கிய கோஷங்களை 1000க்கு மேற்பட்ட பெண்கள் கோஷித்துக் கொண்டே ஊர்வலத்தில் பங்கு கொண்டார்கள்.

நகரின் மூலைக்குமூலை

www.tamilarangam.net

அமைந்துள்ள நிர்வாணப் பெண்களின் கண்காட்சிக்கூடங்களிற்கு முன் நின்று அவற்றை உடனடியாக அகற்றும்படி கோஷமிட்டனர்.

நகர்ந்து சென்ற ஊர்வலம், 1930களில், கருக்கலைப்பு தடைச்சட்டத்தை எதிர்த்தும், சட்டபூர்வமற்ற கருக்கலைப்பினால் இறக்கும் பெண்களின் தொகையை குறைக்கும் முகமாகவும் தனது மருத்துவமனையில் வைத்து, கருக்கலைப்பு செய்ததிற்காக அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தினால் சிறையிலடைக்கப்பட்டு, அதற்குப்பின் அமெரிக்காவில் புகலிடம் கோரி, அங்கேயே இறந்த எல்சே கின்லே என்ற பெண் வைத்தியரின் சேவைக்கும், துணிச்சலுக்கும் மரியாதையும், அஞ்சலியும் செலுத்துமுகமாக, அவர் கடமையாற்றிய மருத்துவமனை அமைந்திருந்நத இடத்தில் ஊர்வலம் சற்று நேரம் தரிக்கப்பட்டு மீண்டும் நகர்ந்தது.

உலகின் பல பாகங்களிலும்கருக்கலைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தடை விதிப்பால் ஆயிரக்கணக்கான பெண்கள் சட்டபூர்வமற்ற கருக்கலைப்புக்களை நாடவேண்டியேற்பட்டு, ஒவ்வொரு மூலையிலும் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

கருக்கலைப்பு செய்வதற்கான உரிமையென்பது, ஒரு பெண் தனக்கு எத்தனை குழந்தைகள் வேண்டுமென்று முடிவு எடுப்பதற்கும், எப்போது தனக்கு குழந்தைகள் வேண்டுமென்பதை முடிவுசெய்வதைச் சார்ந்ததே. இச்சுதந்திரம் மறுக்கப்படுவதால், பெண்கள் கட்டாயம் பிள்ளைகளை பெறவேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள்.

ஜேர்மனியின் 218வது சட்டத்தின்படி, கருவுற்றிருக்கும் ஒரு பெண் கட்டாயமாக அக்குழந்தையை பெறவேண்டுமென்றே கூறுகின்றது. இச்சட்டத்தை காப்பாற்றுவதற்காக தேவாலயங்கள் மிகவும் துணை போவதோடு, தங்கள் முழுமையான ஆதரவையும் அளிக்கின்றனர்.

ஒரு பெண் தனது கருவை கலைக்க விரும்பினும், அவளது கணவனின் சம்மதமே முதன்மைப்படுத்தப்படுகின்றது. ஒரு பெண்ணின் தனித்த விருப்பு மதிக்கப்படுவதில்லை. அக்குழந்தை பிறப்பதனால் அக்குழந்தைக்கோ அல்லது தாயிக்கோ உயிராபத்து ஏற்படும் பட்சத்தில் அல்லது அக்கரு உருவாகுவதற்கு பாலியற்பலாத்காரம் காரணமாகவிருந்தால் மட்டுமே

www.tamilarangam.net

அவளுக்கு அக்கருவைக் கலைப்பதற்கு அனுமதி கிடைக்கின்றது.

அக்குழந்தையை வளர்ப்பதற்குரிய பணமும், பாதுகாப்பும் தாம் அளிப்பதாக அரச தரப்புகளில் அவர்களுக்கு உறுதியளிக்கப்படுகின்றது.

கிழக்கு-மேற்கு ஜேர்மன் இணைவிற்கு முன்பு, கிழக்கு ஜேர்மனியில் கருக்கலைப்பதற்கான சுதந்திரத்தை அங்குள்ள பெண்கள் பெற்றிருந்தார்கள். இணைவிற்குப்பின் மேற்கு ஜேர்மன் யாப்பிலிருந்த இச்சட்டம் முழுஜேர்மனிக்கும் அமுலாக்கப்பட்டு அப்பெண்களின் சுதந்திரம் பறிக்கப்படுகின்றது. அச்சுதந்திரத்தையும், உரிமையையும் விட்டுக் கொடுக்க விரும்பாத அப்பெண்கள் தங்கள் உரிமை கேட்டு தீவிரமாக அரசுக்கெதிரான பிரச்சாரத்திலீடுபடுகிறார்கள். அப்பெண்களுடன் மேற்கு ஜேர்மன் பெண்களும் தங்கள் பலத்தை இணைத்துள்ளார்கள்.

முன்னாள் சோவியத் யூனியனில் 1936 ஆண்டு ஸ்டாலினால் கருக்கலைப்பு கடுமையான குற்றமாக கருதப்பட்டு தடைசெய்யப்பட்டிருந்தது. பின்பு, 1955க்குப் பின் அனுமதி வழங்கப்பட்டு குடும்பக்கட்டுப்பாட்டின் ஒரு அங்கமாக செயற்படுத்தப்பட்டது. இதிலிருந்து இப்பிரச்சினையானது, அறத்துக்குரியதோ, பிள்ளையினதும் தாயினதும் நலனில் அக்கறை கொண்டதோ அல்ல எனத் தெரிவதுடன், அந்நாட்டின் பொருளாதார நிலமைகளுக்கேற்ப பெண்கள் பாவிக்கப்படுவதுடன், அவளின் உடம்பு மீதான சுயகட்டுப்பாடு அற்றுப்போகின்றது.

அயலாந்து போன்ற நாடுகளில் இச்சட்டம் மிகவும் கடுமையாக பிரயோகிக்கப்படுகின்றது. உதாரணமாக பாலியற்பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்ட 14 வயது பெண்ணுக்கு கருக்கலைப்புச் செய்யும் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது.

பெண்கள் மீது இவ்வாணதிக்கச் சமூகத்தினால் சுமத்தப்பத்தப்பட்ட ஒடுக்குமுறைகளின் ஒரு வடிவமே இதுவும். ஒரு கருவை அழிப்பது ஒரு பாவச் செயலாயினும், அதைச் சுமக்கும் பெண்ணின் அபிப்பிராயமும், விருப்பும் மதிக்கப்படுவது அவசியமாகும்.

மீரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கசப்பான ஞாபகமூட்டலும்- எச்சரிப்பும்

## கீதாவின் தேனீ சிறுகதை மீது கவனமான வாசிப்பிற்கான பரிந்துரை

எல்லாவற்றிற்கும் முதலில்

-சஞ்சிகைகளுக்கு சந்தா கட்டாமல் இருந்தாலும் கூட வாசகப் பண்பை மதித்து தொடர்ந்து சஞ்சிகைகளை அனுப்பிவைக்கும் சஞ்சிகைப் பொறுப்பாளர்கள் எப்போதும் என் நேசம் நிறைந்த அன்பிற்குரியவர்கள்.

இவர்கள் ஊர்திரும்பும் போது இரண்டு பிரச்சனைகள் காத்திருக்கின்றன.

1. வெடி
2. வறுமை- ஓர் பெனிக்கும் வராது ஊர்திரும்ப.

தொடர்ந்து! (வைற்ற)

அதிஸ்டத்தில் வெளிநாட்டிற்கு வந்துவிட்டதால், யுத்த கலாசாரத்தினால் மனோவியல் ரீதியில் பாதிக்கப்படாமல் தோன்றி, மறைந்து தோன்றி வளர்ந்துவரும் சஞ்சிகைக்கடலில் எல்லாச் சஞ்சிகைகளினதும் எல்லாப் பக்கத்தையும் படித்து முடிப்பது சற்று சிரமமாகத்தான் இருக்கிறது.

மலையகத்தில் யுத்தச் சூழலைத் தோற்றுவிப்பதில் வடக்கின் யுத்தப்பேய்கள் தோல்வியும் வெற்றியும் மாறி மாறிக் கண்டு வருகின்றன.
- ஒளித்திருக்கும் இடமாகவும் தேவைபட்டால் சுற்றுப்புறங்களில் தாக்கிப்போட்டும் வரும்- இந்த போர்க்குணம் கொண்ட இளைஞர்களின் சமூக மனவியல் ஏற்கனவே ஆராய்ந்து வெறுத்தொதுக்கப்பட்ட ஓர் சமாச்சாரம்தான்.
-"நல்ல தருணமடி இதை நழுவவிடுவாயோ"- பாணியில் தொழிலாளர்களின் வாழ்க்கையை யுத்தகுழலுக்குள் திணிக்கும் வருந்தியழைக்கும் வசந்த அழைப்புகள் வடக்கிலிருந்து வெளிநாடுவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ்வப்போது கேட்காமலில்லை-
அதிலும் வரட்டு அரசியலின் மேதாவி மதிப்பீடுகளிலிருந்து விலத்தி, மனிதநேயத்தின் பக்கம்பார்த்துக் கண்சிமிட்டும் இலக்கிய அரும்புகள்- முகிழ்ப்புகளின் நெகிழ்ச்சியான- ஈரலிப்பான- நெஞ்சில் பால்வார்க்கின்ற. எழுத்துக்கள் 'அவசர இயக்கத்தால்' தவறிப் போய்விடுகின்றன.
சிலது- சலிப்பியக்கத்திற்குள்ளாகின்றன. சிலது- சிரிப்பியக்கத்திற்குள்ளாகின்றன.
- கீதாவின் "சிலுவை சுமப்பவர்கள்"- தேனீ சிறுகதை இதில் எந்த நல்மதிப்பீட்டிற்கும் அகப்படாத- ஓர் அற்புதமான அவலச்சுவைநிறைந்த சிறுகதை.
கதையில் வரும்- "தோட்டக்காட்டு வேலைக்காரப் பெட்டை"- லட்சுமி- பெயரில் தான் எத்தனை கவர்ச்சி- மங்கள கரமான லக்சுமியின் கையால் சுவாமிப்படத்திலிருந்து தங்க நாணயங்கள் தொடர்ந்து இன்னும் கொட்டிக் கொண்டுதான் இருக்கிறது- இலங்கைப்படத்தில் இருப்பவர்களுக்கு.
- இந்த லக்சுமி இன்று- அல்லது எப்போதோ இறந்திருக்கலாம், ஆனால் இலங்கைப்படத்தில் அவள் படம் இராது- அடையாளம் இராது. ஆனால் யாழ்ப்பாணத்தின் திமிர்த்தனத்தின் மேசைவிரிப்பின் கீழ் இருக்கும் இருளில் இவளின் முகம் நிச்சயம் இருக்கும்- இன்னும் இருக்கும், எதுக்காகவுமல்ல.
வேலைக்குச் சேர வந்தவுடன் நேரே நாய் நக்கிய சட்டிபாணையைக் காட்டும், டொக்ரர்- இஞ்சினியர்- எக்கவுண்டன்களும்- மனைவிமார்களும் அடுத்தநாள் விடிய ஒழும்பி- இவளைப்பிடித்து ஓர் புகைப்படம் எடுத்திருப்பர். வீட்டில் ஏதாவது தொலையலாம்- லக்சுமி- புவனேசுவரியின் அடி உதை, தொல்லை தாங்காது நிச்சயம் ஓடியிருப்பாள். புகைப்படம் பொலிஸில் கொடுபடும்.
- ஆனால் இந்த புவனேசுவரிகளின் திருமணக் கொண்டாட்டங்கள் வேலையெல்லாம் இவள் செய்து முடித்திருக்கும்போது முதலிரவை முடித்து சபாநாதன்-புவனேசுவரி வெளியே வரும்போது வெள்ளி

www.tamilarangam.net

முளைத்திருக்கும்- லட்சுமி இரவு முழுதும் தூங்காமல்- விடிந்ததும் இவர்கள் குளிப்பதற்கு சுடுதண்ணீர் எரித்திருப்பாள். முதல்நாள் கலியாணவீட்டிற்கு வந்தவர்களுக்கு "எங்களிண்டை வேலைக்காரப் பெட்டை" ஊத்தை உடுப்போடு காட்டப்பட்டிருப்பாள்.

இந்த கலியாண வீட்டுப் படங்கள எதிலும் இவள் இடம்பெறாள்.

- இப்படியாகத்தானே யாழ்ப்பாணத்தின் அட்டமயல் எங்கும் இவள் அறிமுகப்பாடுத்தப்பட்டிருப்பாள்.

- ஆனாலும் சிறுகதை எழுதத்தெரிந்த படித்த படிப்பாளிகளும் சரி, சிறுகதை எழுதத் தெரிந்த பிள்ளைகளும் சரி இவளின் சிறுகதையை பலமாதிரியும் முடிப்பர். ஏற்கனவே தெரிந்த சிறுகதை சிலதில் லக்சுமியுடன் வீட்டுக்கார அய்யா அல்லது மகன் படுத்து- பிள்ளை வாங்கி அய்யாவின் அல்லது மகனின் திமிர்த்தனமும் சாதிவெறியும் காப்பாற்றப்பட லக்சுமி- கண்காணத ஆஸ்பத்திரியில் அல்லது அலரிக்காம்பால் குத்தும் அயல்கிராமத்துக் கிழவியிடம் இருந்து- இறந்து- பத்திரமாக பெட்டியில் அடைக்கப்படுவாள் அல்லது- இருந்து முகம் திருத்தி ஐயா கொழும்புக்குப் போற நேரம் கொண்டுபோய் விட்டுவிட்டு வருவார்.

அல்லது கதை நீட்டப்படாமல் திருகிக் கொன்று அயலில் உள்ள அண்ணாப்பத்தை வளவுக்குள் தாக்கப்பட்டிருப்பாள். அத்துடன் மலையகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் உள்ள உறவு மறைந்து வேறுபிரச்சனைகள் வந்துவிடும். ஆனால் இக்கதை அப்படி தன் உறவை துண்டித்துக் கொள்ளவில்லை. அய்யா அல்லது பெரியசாமி எப்படியும் கொண்டுவந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் அடுத்த லட்சுமிக்காக அம்மா காத்திருக்கும் உண்மையான சூழலை இது சொல்கிறது.

யாழ்ப்பாணத்தை நம்பாமல் கொழும்பை சார்ந்திருக்கும் தற்காலிக நிம்மிதியை- அல்லது- விடுதலையை இது அனாயசமாக சொல்லிவிடுகிறது.

கதையில் எந்தப் போலிப் பிரச்சார வார்த்தைத் தொனியும் இன்றி மிகவும் நிதானமான எதிர்காலத்திற்கான ஞாபகமூட்டலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எச்சரிக்கையையும் சொற்கள் எங்கும் உணர்த்தி நிற்கிறது- சிலுவை சுமப்பவர்களில், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "சொக்கிலேற் மாமா" வில் இந்த நெருப்பு மேற்குலகில் இன்னும் நூராமல் எரிந்து கொண்டிருக்கிறது.

சுகன்

## நூல் அறிமுகம்

### எது வரை தொடரும் மனிதரின் கதை?

சல்மன் றுஷ்டிக்கு மாரணதண்டனை பிறப்பித்த 3வது ஆண்டையொட்டி B.B.C தொலைக்காட்சியில் Guenter Grass அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

துணைக்குறிப்புக்களுடன், ஜெர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில்:
ந.சுசீந்திரன்

வெளியீடு:
"நூல்",

Sussindran–Nadarajah Straube,
Brunsbuetteler Dammm 21,
1000 Berlin 2o,
Germany.

*************************************************************************

### கட்டிடக் காட்டுக்குள்

செல்வம் கவிதைகள்

வெளியீடு:

ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம்

"ஆசியா"

3, Allee Paul Leautaud,
95200 Sarcelles,
FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள்

உமா

நவம்பர்மாதம் 25ம் திகதி சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்தக் கோரும் தினமாகும்.

டொமினிக்கன் குடியரசில் பிரபலமாக அரசியலில் ஈடுபட்டவர்களான மிரவல் சகோதரிகள், 1960 ஆண்டு இத்தினத்தன்று பாதுகாப்பு படையினரால் கொலை செய்யப்பட்டனர். 1981ம் ஆண்டு கொழும்பியாவில் நடைபெற்ற பெண்கள் மாநாடு ஒன்றில், இந்நிகழ்வை ஞாபகப்படுத்துமுகமாக இத்தினத்தை சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்தக்கோரும் தினமாகப் பிரகடனப்படுத்தினர். உலகெங்கும் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரவும், அவற்றிற்கெதிராக போராடவும் இத்தினத்தை பெண்கள் கொண்டாட ஆரம்பித்துள்ளனர்.

உலகில் பல பாகங்களிலும் பெண்கள் நாளாந்தம் பல்வேறுவிதமான வன்முறைகளுக்குட்படுத்தப்படுகிறார்கள். பாலியற்பாலத்காரம், உடல்ரீதியான தாக்குதல்கள், பாலியற் வியாபார பிரகாரங்கள், விபச்சாரம், தபால்மூலம் பெண்களைத் தெரிவு செய்தல், எழுத்து, உளரீதியான போன்ற வன்முறைகளையே பெண்கள் பரவலாக எதிர்நோக்குகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறையென்பது உலகிலேயே நன்கு காப்பாற்றப்பட்டுவரும் ஒரு இரகசியமாகும். இது ஒரு தனிமனிதப் பிரச்சினையாக கருதப்பட்டு, வெளிப்படுத்தப்படாமல் அடக்கியே வைக்கப்படுகின்றது. இவ்வன்முறைகளில் பாதிக்கப்பட்ட பெண்களே சமூகத்தின் மீதுள்ள பயம் காரணமாக தமது பிரச்சினையை வெளியில் சொல்லாமையினால் இதற்கு காரணமானவர்கள் தப்பிப்பதோடு, அப்பெண்கள்

www.tamilarangam.net

தொடர்ந்தும் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

அதிகமான பெண்கள் வீதிகளிலோ, வேலைத்தலங்களிலோ அல்லது தங்கள் வீடுகளிலோ வைத்து பாலியற்பலாத்காரங்களுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாகின்றனர். இரவுகளில் ஒரு பெண் தனித்து சுதந்திரமாக நடமாடமுடியாத நிலையே நிலவுகின்றது. அவள் வெளியில் செல்லும் ஒவ்வொரு கணமும் அவள் பலாத்காரப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளிருக்கின்றன. வீட்டில் வைத்து கணவனாலோ, தந்தையர் அல்லது சகோதரர்களால் பாலியல் ரீதியான வன்முறைகளை எதிர்கொள்ளும் அதேவேளை வேலை செய்யுமிடத்தில் முதலாளிமாரினாலோ அல்லது உயர்அதிகாரிகளினாலோ பெண்தொழிலாளர்கள் பலவிதமான துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். குடும்பச்சூழலில் பலாத்காரங்களிற்குள்ளாக்கப்படும் பெண்கள் தமக்கு நிகழ்ந்தவைகளை வெளியில் சொல்வதன் மூலம் தங்கள் குடும்ப கௌரவம் தாழ்ந்து விடுமென்றபடியால் அவ்வுண்மைகள் மறைக்கப்பட்டே வருகின்றன. வேலை செய்யுமிடத்தில் உயர் அதிகாரிகளினால் பாதிக்கப்படும் பெண்கள் தாங்கள் வேலையை இழந்து விடுவோம் என்ற பயத்தினாலும், அவர்களின் பொருளாதார நிலைமைகளினாலும் அவர்கள் தொடர்ந்தும் மௌனிகளாகவேயிருக்கின்றனர்.

யுத்தச்சூழலிலும் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. அத்தகைய நிலைமைகளில் இராணுவத்தினரால் பாலியற்பலாத்காரத்திற்குட்படுத்தப்படும் பெண்களின் தொகை அதிகமாகவே காணப்படுகின்றது. இவ்வாறு பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்கள் எமது சமூகத்தினால் ஒதுக்கிவைக்கப்படுவதோடு "நடத்தை கெட்டவள், "கெட்டுப் போனவள்" எனும் இழிசொற்களால் அவளை மேன்மேலும் புண்படுத்தி அவளின் வாழ்க்கையில் இனியொரு பயனும் இல்லையென்பதை அவளுக்கு மறைமுகமாக புகட்டுவதோடு, அதிகமான பெண்களை தற்கொலை செய்யவும் வைக்கிறார்கள். அவள் செய்யாத குற்றத்திற்காக அவளே தண்டனை அனுபவிக்கவேண்டியுள்ளது.

பாலியற்பலாத்காரங்களிற்காக நீதிமன்றங்களிற்கு எடுத்துச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்லப்படும் வழக்குகளில் கூட சம்பந்தப்பட்ட ஆண்களுக்கு சாதகமான தீர்வுகளே பெரும்பாலாக வழங்கப்படுவதோடு, பலரின் மத்தியில் வைத்து அப்பெண்களை அவமானப்படுத்தக்கூடிய கேள்விகள் கேட்கப்பட்டு, அவர்கள் மேன்மேலும் இழிவுபடுத்தப்படுகிறார்கள்.

சிலசமயங்களில் வாழ்வில் இத்தகைய பாதிப்புகளுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் வேறு எந்த மார்க்கமுமின்றி விபச்சாரத்திற்குட்படுத்தப்படுகிறார்கள்.

இந்நிலையிலிருக்கும் பெண்க பொருளாதார காரணங்களினாலும் வெளியில் வந்தாலும் தாங்க சமூகத்தினால் தாழ்வாகவே நடாத்தப்படுவதால், தொடர்ந்து அவ்வாறேயிருக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். விபச்சாரம் செய்யும் ஒரு பெண்ணை உடலுறவு கொள்ளும் ஒரு பொருளாகவே கணிக்கிறார்களேயன்றி, அவளது உணர்வுகளையோ, அவளின் சூழலையோ அல்லது அவள் இந்நிலைமைக்கு தள்ளப்பட்டதற்கான

www.tamilarangam.net

காரணத்தையோ அறிய எவரும் முற்படுவதில்லை. ஆண்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அவளை தொடர்ந்தும் அந்நிலையில் வைத்திருக்கவேண்டிய கட்டாயம் முதலாளித்துவ அமைப்புமுறைக்கு உள்ளது. தங்களுக்குத் தேவையான உழைப்புச்சக்தியை எந்தவித தடங்கலுமின்றி ஆண்களிடமிருந்து பெறுவதனால் அவர்களின் தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும், ஆகையினால் இன்னும் பல்லாயிரக் கணக்கான பெண்கள் தங்கள் உடலை விற்க வேண்டிய நிலையேற்படுகின்றது. இவர்களினாலேயே பெண்களின் நிர்வாண படங்களைக் கொண்ட ஆபாசப் பிரசாரங்களும், ஆபாசப்படங்களும் தயாரிக்கப்படுகின்றன.

தபால்மூலம் பெண்களை தெரிவு செய்யும் வியாபாரம் ஐரோப்பாவில் பரவலாக நடைபெறும் ஒன்றாகும். இவ்வியாபாரத்தினால் பல பெண்கள், குறிப்பாக ஆசிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். தங்கள் எதிர்கால வாழ்வைப்பற்றி அதிக எதிர்பார்ப்புகளுடனும், வண்ணக்கனவுகளுடனும் வரும் பெண்கள்,இங்கு ஒருவித சுதந்திரமற்ற சிறைவாழ்க்கையையே சொல்லொனாத் துயரங்களுடன் வாழவேண்டியுள்ளது. தங்கள் சொந்தநாடுகளிலிருந்து வந்த நாளிலிருந்து அவர்களது கணவன்மாரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வாழ்கிறார்கள். தொடர்ந்து வாழமுடியாமல் விவாகரத்து எடுக்கும் நிலையில் தங்கள் சொந்தநாடுகளிற்கு திரும்பிப்போகும் நிலையேற்படுவதோடு, அந்நாடுகளில் இவர்கள் தாழ்வாகவே நோக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் சில எழுத்தாளர்களும், சஞ்சிகைகளும் பங்கு கொள்கின்றனர். இதனால் பெண்களுக்கு உடல்ரீதியாக பாதிப்பு ஏற்படாவிட்டாலும், உளரீதியாக பாதிக்கச் செய்கிறார்கள். பெண்களை இழிவு படுத்தக்கூடிய ஆக்கங்களையே பிரசுரிப்பதையே நோக்காகக் கொண்டு செயற்படுவது, பெண்களை ஒரு படியாவது முன்னேற முடியாது மீண்டும் குழிக்குள் தள்ளும் முயற்சியாகும். நாம் வெளியில் வருவதால் எமக்கும் கெட்டபெயர் வரும் என்ற பயம் பெண்களுக்கு ஊட்டப்படுவதால்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளின் வெளிநடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடப்பட்டு, அவள் தொடர்ந்தும் உள்ளேயிருக்கவே நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆக்கங்கள் மட்டுமல்ல, ஓவியங்களிலும் கூட பெண்களை ஆடை குறைத்து கவர்ச்சிப் பொருளாக சித்தரித்துக் கொச்சைப்படுத்துகிறார்கள்.

எல்லா நாடுகளிலுமுள்ள அதிகமான பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையாகவும், அதிகம் பிரச்சாரப்படுத்தப்படாமலும், மழுங்கடிக்கப்பட்டுவருவதுமான வன்முறையானது குடும்பங்களில் கணவன்மாரினால் அடித்து துன்புறுத்தப்படுவதேயாகும். இப்பிரச்சினை, கணவன் மனைவிக்குமிடையிலான குடும்பவிவகாரமாக கருதப்பட்டு வெளியில் வரவிடாது எல்லோரினாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

"புருசன் பெஞ்சாதிக்கு அடித்தால் நாங்கள் என்ன செய்வது"

"வேலை முடித்து வரும் ஆண்கள் தங்கள் கோபத்தையும், மனவுலைச்சலையும் எதாவது ஒரு வழியில் தீர்த்துக் கொள்ளத்தானே வேண்டும்"

"பெண்கள் இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குவது தவிர்க்கமுடியாதது. அதிகமான சந்தர்ப்பங்களில் பெண்கள் இதை தாங்களே விலைக்கு வாங்கிக்கொள்கிறார்கள்." என ஒதுங்கி நிற்பதன் மூலமும், "அவன் குடிப்பதனால் தான் அடிக்கிறான்". இது ஒரு தனிமனித குணாம்சம், அல்லது பரம்பரை ரீதியான பழக்கம்"

என அவனது குற்றத்தை மூடி மறைத்து, இந்நிகழ்வால் பாதிக்கப்படும் பெண்களைப்பற்றி யாருமே கவலைப்படுவதில்லை. திருமணம் முடிந்தவுடன் தன்னுடன் வாழ வந்தவளை, தன்னைப் போலவே எல்லா உணர்வுகளும், ஆசைகளும், தேவைகளுமுள்ள ஒரு சகஜீவியாக நோக்காது, தனக்கு சமைத்து போடுவதற்கும், மற்றைய வீட்டுவேலைகளைச் செய்வதற்குமான இயந்திரமாகவும், தனக்கு தேவையான போது உடலுறவு கொள்வதற்கும், தனக்கு ஆத்திரம் வரும் போது அடித்து உதைக்கும் பொருளாகவுமே நினைக்கிறார்கள்.

மணம் முடித்த நாள் முதல் தங்கள் கணவன்மாருக்கு சகல தேவைகளையும் பூர்த்தி செய்துவிட்டு, கணவன்மாரின் அடிஉதைகளை விதியென்றும், கணவனை எதிர்க்கவேண்டிவருமெனவும் சகித்துக்

www.tamilarangam.net

கொள்கிறார்கள். தங்கள் பிரச்சனைகளை வெளியில் சொல்வதால், தங்கள் குடும்பமானம் போய்விடுமென்றும் தமக்குள்ளேயே அடக்கி வைத்திருப்பதனால், ஆண்களுக்கும் தாங்கள் என்ன செய்தாலும் வெளியில் வராது என்ற துணிவு பிறக்கின்றது.

அடித்து துன்புறுத்துவதுவென்பது ஒரு பலம்வாய்ந்த பயங்கரவாதமாகும். ஒரு உறவில் இவ்வன்முறை ஆரம்பிக்குமானால் அது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லும். அடிப்பதென்பது வெறும் உடல்ரீதியான தாக்குதல் மட்டுமல்ல. அது மிரட்டல், பொருளாதார ரீதியான தடை, உளரீதியான, பால்ரீதியான பலாத்காரம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய அணுகுமுறையாகும். அடிப்பதனால் உடல் ரீதியான பாதிப்புக்களோடு, உளரீதியாகவும் பெண்கள் பாதிப்படைவதால் அவர்களின் மனவலிமை குன்றுகின்றது. பல ஆண்கள் அடிப்பதென்பதை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு, பெண்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த செய்வதோடு, அவளை பயமுறுத்தியும், அவளை மதிப்பற்றவளாகவும் கருதவும் செய்கிறார்கள். அவள் நிதமும் சொற்களால் இழிவுபடுத்தப்படும்போது அவள் தனது சுயகௌரவத்தை இழக்கின்றாள். இவ்வன்முறை தினமும் வெளிப்படையாக தெரியாததுடன், சூசகமான சில வடிவங்களையும் எடுக்கின்றன. உடல் ரீதியான தாக்குதல்கள் எம்மால் அடையாளம் காணப்பட்டாலும் வேறு ரீதியான வன்முறைகளும் இருக்கின்றன. பெண்களை வெளியில் செல்லாமல் தடுப்பதோ, அவளின் வெளிச்செயல்களுக்கு முட்டுக்கட்டையிடுவதும் ஒருவித வன்முறையாகும்.

காலகாலமாக எமது சமூகத்தின் போலியான கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்த பெண்களுக்கு, புருஷனுக்கு அடங்கி வாழவேண்டுமென்பது சின்ன வயதிலிருந்தே போதிக்கப்பட்டு வந்தமையாலும், பொருளாதார ரீதியான ஆண்களின் தங்கிவாழவேண்டியவர்களாக இருப்பதால் கணவன்மாரை பிரிந்து சென்றால் தனித்து வாழமுடியாத நிலையுள்ளது. கணவன் மனைவிக்குமிடையிலான பிரச்சினையால் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுமென்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அச்சத்தினால், பிள்ளைகளின் நலன் கருதி வாழ்நாள் பூராகவும் வேதனையை அனுபவிக்கிறார்கள். எமது நாடுகளில் சமூகரீதியான பாதுகாப்பு அற்ற நிலமையினால் பெண்கள் மீண்டும் கணவனின் அல்லது பெற்றோரின் உதவியையே நாடவேண்டியுள்ளது. அந்நியநாடுகளில் புலம்பெயர்ந்த குடும்பங்கள் மத்தியிலும் இவ்வன்முறை தொடர்கின்றது. ஏற்கனவே அகதிச்சூழலில் பலவிதமான சட்டங்களுக்கு மத்தியிலும், இனவாதச் சூழலலிலும் வாழும் பெண்களுக்கு இது இரட்டிப்பான வேதனையை கொடுக்கின்றது.

இங்கு வாழும் அதிகமான பெண்களுக்கு தங்கள் குடும்பத்தை தவிர்ந்த ஏனையோரை தெரியாமையினாலும், அந்நாட்டு மொழியில் பரிச்சயமில்லாததினாலும் அவர்களால் அப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாமலுள்ளது. ஆண்களின் தஞ்ச அந்தஸ்திலேயே பெண்கள் தங்கி வாழ்வதால், கணவன் மாரை பிரிந்தால் தாங்கள் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சமும் அவர்களிடம் உள்ளது. இந்நாடுகளிலுமுள்ள பெண்களுக்கான பாதுகாப்பு நிலையங்களுடன் தொடர்புகொண்டு அங்கு செல்வதால் தங்கள் குடும்பமானம் போய்விடுமென்பதாலும், வெளிச்சூழலில் வாழ பழக்கமின்மையாலும், பொருளாதார ரீதியாக சுயதேவையை பூர்த்தி செய்ய முடியாமையினாலும் கணவன்மாரிடமே திரும்பிச்செல்கின்றனர் அல்லது பெற்றோரால் அவர்களுக்கு இன்னொரு திருமணம் செய்துவைக்கப்படுகின்றது.

பெண் உரிமையென்பது மனிதஉரிமையென்பதை இது எமக்கு தெளிவாக காட்டிநிற்கின்றது. யாருக்கும் யாரையும் அடித்து துன்புறுத்தும் உரிமையில்லை. சுதந்திரம், பயமின்மை போன்ற அடிப்படை மனித உரிமைகளின்றி பெண்களால் முழுமையாக எந்த அபிவிருத்தியிலும் ஈடுபடமுடியாமலிருக்கின்றது. இப்பிரச்சினை எம் எல்லோரினதும் வாழ்க்கையிலும் பெரும்மளவிலான பாதிப்பையேற்படுத்துகின்றது. பெண்களின் உடல்ரீதியான ஆரோக்கியமற்ற தன்மை, சமூகத்தில் அவர்களது பங்களிப்பின்மை, மனஅமைதியின்மை, நிரந்தரமற்ற சூழல், கல்விரீதியான முன்னேற்றமின்மை போன்றவை காணப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களுக்கெதிரான இவ்வன்முறைகளை, இன்னொரு பெண்ணின் பிரச்சினையாக நாம் கருதாது, எமது பிரச்சனையாக கருத்திற் கொள்ளவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் பிரச்சினை வெளியில் சொல்வதன் மூலம் பலருடன் இணைந்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். பெண்கள் பொருளாதார ரீதியாக பிறரிடம் தங்காது வாழ்வார்களாயின் தங்கள் எதிர்கால முடிகளை அவர்களே சலபமாக எடுக்கமுடிவதுடன் வீட்டில் எதிர்கொள்ளும் வன்முறைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் வாழ்க்கைகளை ஒன்று கூட்டுவோம்.



எனது மார்பு காயப்படுத்தப்பட்டது
மூளை தாக்கப்பட்டது
எனது தோளில் தீத் தழும்புகள்
எனது ஆத்மா சிதறடிக்கப்பட்டது.
அயலவர்கள் பார்ப்பதனால்
என்னால் கதறமுடியாது.
உதவிகேட்டு அழுதால்
அங்கு ஒருவரும் இல்லை.

www.tamilarangam.net

இடையில் ஏற்படும் அமைதியில்,
சிதறப்பட்ட துண்டுகளை ஒன்றுசேர்த்து
நான் முன்பு என்னையழைத்த
புதிரைப் போலவே
மீண்டும் அவற்றை அடுக்க முயற்சிக்கின்றேன்.

சூனியமான வெற்றிடத்தில்,
நான் வெளியில் சென்று
என்னுடைய புதிய துண்டுகளை
தேடும் வரையில்,
நான் என்றென்றைக்கும் தொலைக்கப்படுவேன்,
தனிமையால் துரத்தப்படுவேன்,
கற்பனையின் துண்டங்களாகவிருப்பேன்
என்பதை
இறுதியாக உணர்கின்றேன்.

உங்களிடமும் சிலதுண்டுகள்
அவற்றையும் ஒன்று சேர்ப்போமானால்
நாம் புதிதாக ஆரம்பிக்கலாமா?

எங்கும் பலதுண்டுகள்
ஆனால்,
எமது பகிர்வு ஒன்றே
நாம் அமைக்கும் படம்.

நன்றி: 'த ட்ரிபியுன்'

நீனா டே, ரு